இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 18-05-2023

# கர்நாடகாவும் வழிகாட்டியது 2

எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இலவசங்களை அள்ளி இறைத்தது கர்நாடக பா.ஜ.க. 'இலவசங்கள்தான் வளர்ச்சிக்கு தடை' என்று அதே கர்நாடகாவில் பிரச்சாரமும் செய்தார் பிரதமர்.

*** ஏழைக் குடும்பங்களுக்கு தினமும் அரை லிட்டர் பால்**

*** ஆண்டுக்கு 3 சமையல் கியாஸ் சிலிண்டர் இலவசம்**

*** 5 கிலோ சிறுதானியங்கள் இலவசம்**

*** அடல் ஆகாரகேந்திரா சார்பில் குறைந்தவிலையில் உணவு.**

*** படித்த இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை**

*** மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை என்று அறிவித்தது கர்நாடக பா.ஜ.க.**

கர்நாடகாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் (வங்கிகள், பள்ளி - கல்லூரிகள், தொழில்துறை நிறுவனங்கள்) அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் மற்றும் ராம்நகராவில் ராமர் கோவில் கட்டப்படும், பெங்களூர் மெட்ரோ விரிவாக்கம் என பல்வேறு அறிவிப்புகளை பட்ஜெட் உரையில் கடந்த மார்ச் மாதம் பசவராஜ் பொம்மை வெளியிட்டார். ஆனால் முந்தைய சட்டமன்றத் தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை பா.ஜ.க. ஆட்சி என்று கர்நாடக காங்கிரசு கட்சி குற்றம் சாட்டியது.

**காதில் பூ வைத்தபடி சட்டமன்றக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா பங்கெடுத்தார். "கடந்த சட்டமன்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குறுதியில் அளித்த எந்த திட்டங்களையும் இதுவரை நிறைவேற்றவில்லை... அதேபோல், கடந்த பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்றாமல் மக்களை பா.ஜ.க. அரசு ஏமாற்றிவிட்டதை சுட்டிக்காட்டும் வகையில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் காதில் பூ வைத்துக்கொண்டு அவை நடவடிக்கையில் பங்கேற்கிறோம்" என்று சித்தராமையா சொன்னார்.**

**2018 தேர்தல் அறிக்கையில் 600 வாக்குறுதிகளை அளித்த பா.ஜ.க. அதில் 10 சதவீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருப்பதாகவும் சித்தராமையா சொன்னார். இது மட்டுமல்ல, அகில இந்திய அளவில் பா.ஜ.க. அளித்த வாக்குறுதிகளும் கர்நாடக தேர்தலில் விவாதப் பொருள் ஆனது.**

2014 ஆம் ஆண்டு இந்திய அளவில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க., பல வாக்குறுதிகளை அளித்தது. அதில் முக்கியமான வாக்குறுதிகளை 2023 ஆம் ஆண்டு வரைக்கும் நிறைவேற்ற வில்லை.

*** ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை**

*** வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் கறுப்புப்பணத்தை மீட்டுக் கொண்டு வருவோம்.**

*** விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பு ஆகும்.**

*** 2025 ஆம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியா மாறும்.**

*** வளர்ச்சியில் முன்னேறும்.**

*** அனைத்துப் பொருள்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படும்.**

*** இறக்குமதியே இருக்காது.**

*** இந்தியா மீது அந்நிய நாடுகள் தாக்குதல் நடத்தாது.**

*** மாநிலங்கள் மறுமலர்ச்சி பெறும்.**

*** கறுப்புப் பணம் ஒழியும்.**

*** கள்ளநோட்டு இருக்காது.**

*** வாராக்கடனை வசூலித்து முடிப்பேன்.**

*** அவசியப் பொருட்களின் விலையை முழுமையாகக் கட்டுப்படுத்துவேன்.**

*** அரசியல் தலையீடு இல்லாமல் புலனாய்வு அமைப்புகள் செயல்படும்.**

*** எரிவாயு விலை கட்டுப்படுத்தப்படும்.**

*** அனைத்து மாநிலங்களிலும் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும்.**

*** பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் வரி நடைமுறை எளிமைப்படுத்தப்படும்.**

*** மாநிலங்களுக்கு அதிகளவில் நிதி அதிகாரம் வழங்கப்படும்**

- இவை அனைத்தும் மோடி கொடுத்த வாக்குறுதிகள். இதில் எதையெல்லாம் நிறைவேற்றிக் காட்டினேன் என்று பிரதமர் தனது உரையில் குறிப்பிடவே இல்லை. மாறாக, அழுகாச்சி காவியம் பாடினார்.

"நான் நாட்டு மக்களுக்காக உழைத்து வருகிறேன். ஆனால் என்னை குழி தோண்டி புதைப்பதில் காங்கிரஸ் மும்முரமாக உள்ளது. எனக்கு கல்லறை தோண்டுவதில் காங்கிரஸ் மும்முரமாக உள்ளது. அதைப் பற்றியே சிந்திக்கிறது. ஆனால் இந்திய மக்களின் ஆசி எனக்கு உள்ளது" என்று மாண்டியா மாவட்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசினார் பிரதமர் மோடி. அதாவது தன்னைப் பற்றிய மிதமிஞ்சிய மிதப்பில் இப்படி பேசினார் பிரதமர். ஆனால் கர்நாடகாவில் ஆசி இல்லை என்பதை அம்மாநில மக்கள் தங்களது தேர்தல் முடிவுகளின் மூலமாகக் காட்டி விட்டார்கள்.

பா.ஜ.க. அடைந்து வரும் தொடர் தோல்விகளே கர்நாடகாவிலும் தொடர்ந்துள்ளது. கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பல்வேறு மாநில சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் தோல்வி, கேரளாவில் தோல்வி, பீகாரில் தோல்வி,மேற்கு வங்கத்தில் தோல்வி, ஜார்கண்ட் மாநிலத்தில் தோல்வி, ஒடிசாவில் தோல்வி, சட்டீஸ்கரிலும் தோல்வி, தெலுங்கானாவில் தோல்வி, ஆந்திராவில் தோல்வி, பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு முறை தோல்வி, டெல்லியில் இரண்டு முறை தோல்வி, ராஜஸ்தானில் தோல்வி என சட்டமன்றத் தேர்தல்களில் தோற்ற கட்சிதான் பா.ஜ.க.

மத்தியப் பிரதேசத்திலும், மகாராஷ்டிராவிலும் மிசோரத்திலும், நாகாலாந்திலும், மேகாலயாவிலும் குதிரைப் பேரத்தின் மூலமாக ஆட்சியில் அமர்ந்துள்ளது பா.ஜ.க.

முழுபலத்துடன் ஆட்சியில் இருப்பது உத்திரப்பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், அருணாசலப்பிரதேசம், அசாம், மணிப்பூர், கோவா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்கள் மட்டும் தான். இதை வைத்துத்தான் பா.ஜ.க.வை வடமாநிலக் கட்சி மட்டுமே என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் சொல்வார்.

**தென்மாநிலங்கள் முழுக்க பா.ஜ.க. அல்லாத கட்சிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தென் மாநிலங்களுக்கு எந்தத் திட்டமும் வராததற்குக் காரணம், 'இவர்கள்தான் நமக்கு வாக்களிப்பது இல்லையே' என்ற எண்ணம்தான். மானம் போகும் அளவுக்கு கேவலப்படுத்திய பிறகும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட நிதி ஒதுக்காமல் இருப்பதற்கும் இந்த மனோபாவம் தான் காரணம். அதற்காக வடமாநிலங்களை செழிக்க வைத்துவிட்டார்களா என்றால் அதுவும் இல்லை. இந்து இந்தி இந்தியா என்று பேசினால் வடமாநிலத்துக்கு போதும் என்று நினைக்கிறது பா.ஜ.க. ஆனால், தென்னகத்தில் மண்ணும் மக்களும் பண்பாடும் பேசியாக வேண்டும். பா.ஜ.க.வின் ஒற்றை எதேச்சதிகார மேலாண்மை முனை மழுங்குவது இதனால்தான்.**

**'திராவிட நிலப்பரப்பில் இருந்து பா.ஜ.க. முற்றிலும் அகற்றப்பட்டுள்ளது' என்று தி.மு.க. தலைவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 'இந்தியா முழுமைக்கும்' என்று சொல்லும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதையே கர்நாடக தேர்தல் முடிவுகள் சொல்லி இருக்கின்றன.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 314 கோடியே 89 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், மீன் இறங்கு தளங்கள், மீன் வளர்ப்புக் குளங்கள், பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெற

# அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு மைதானம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

சின்னாளபட்டி, மே 18-

மாநில அளவில் டேபிள் டென்னிஸ் போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற மாணவிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அனைத்து விளையாட்டு வீரர்களும் பயிற்சி பெறும் வகையில் மாபெரும் விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

தமிழ்நாடு டேபிள் டென்னிஸ் அசோசியேசன் ஸ்போர்ட்ஸ் டெவலப்மெண்ட் ஆதாரிட்டி ஆப் தமிழ்நாடு உடன் இணைந்து நடத்திய 2022 - 23க்கான இன்டெர் டிஸ்ட்ரிக்ட் "டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்" என்ற போட்டியில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்கள் வாரியாக நடைபெற்றது.

இதில் மாநில அளவிலான போட்டி மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் உள்ள எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் 13 வயதிற்கான சிறுமியர் பிரிவில் திண்டுக்கல் மாவட்ட அணி முதன் முறையாக 20 ஆண்டுகளுக்கு பிறகு முதல் இடத்தைப் பிடித்து பரிசு கோப்பையை வென்றது.

திண்டுக்கல் மாவட்ட அணியில், ரிச்சிதா, தன்மயா, அக்ஷரா, ஸ்ரீதேவி ஆகியோர் இடம்பெற்று இருந்தனர். இதுபோல 15 வயதிற்கு உட்பட்ட சிறுமியர் பிரிவிலும், திண்டுக்கல் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்று, மாநில அளவில் மூன்றாம் இடத்தினை பிடித்தது.



வெற்றி பெற்ற வீராங்கனைகள் ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்து பரிசுக் கோப்பை மற்றும் பதக்கம், பாராட்டு சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

அவர்களை வாழ்த்தி பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் விளையாட்டுத் துறை மேம்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மாணவர்கள் உலக அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் அளவிற்கு ஒவ்வொரு ஒன்றியங்களிலும் மாபெரும் விளையாட்டு மைதானங்கள் அமைய உள்ளது என்றதோடு வெற்றி பெற்ற மாணவிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை சார்பாக அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியின்போது தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி நடராஜன், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ஜெயன், கிழக்கு மாவட்டப் பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், முருகேசன், திண்டுக்கல் மாநகர துணை மேயர் இராஜப்பா, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரமேஷ், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்தன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பரிந்துரையை ஏற்று

# பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து 10 பேருக்கு ரூ. 20 லட்சம் நிதியுதவி!

நாமக்கல், மே 18-

நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பரிந்துரையை ஏற்று கடந்த 6 மாதங்களில் (2022 டிசம்பர் மாதம் முதல் 2023 மே மாதம் வரை) மட்டும் இதய வால்வு பிரச்சனை, சிறுநீரக பிரச்சனை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, இரத்த புற்றுநோய், மூச்சுக் குழாய் ஆஸ்துமா, வலிப்பு நோய், மார்பக புற்றுநோய் ஆகிய சிகிச்சைகளுக்காக வளர்மதி (வயது 51), செல்வி. லக்ஷயா வயது (6), பி.விஜயலட்சுமி, (வயது 45), லட்சுமி (வயது 70), செல்வன் வருன் (வயது 10), பார்த்திபன் (வயது 52), சு. பாலசுப்ரமணியன் (வயது 52), ஏ.நாகமூர்த்தி (வயது56), செல்வி. பி.நர்மதா மற்றும் கலைவாணி கோவிந்தசாமி (வயது 38) ஆகியோருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.20,20,000 தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பரிந்துரையை ஏற்று மேற்கண்ட நிவாரணத் தொகை வழங்கப்படுவதாக பிரதமர் அலுவலகத்தின் கடிதம் மூலம் தெரிவிக்கப் பட்டு உள்ளது.

நிதி உதவி பெற்றவர்களின் விவரங்கள்:

திருச்செங்கோடு டி.கைலாசபுரம் எட்டிமடைபுதூரைச் சேர்ந்த வளர்மதி (51) என்பவருக்கு மார்பக புற்றுநோய்க்காக கீமோ தெரபியுடன் கூடிய



அறுவை சிகிச்சைக்காக ரூ.3 லட்ச ரூபாய், நாமக்கல் முதலைப்பட்டி ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த பி.விஜயலட்சுமி (45) என்பவருக்கு உயர் ரத்த அழுத்தம் மூச்சுக் குழாய் ஆஸ்துமா சிகிச்சைக்கான மருத்துவ நிதியாக ரூ.50 ஆயிரம், திருச்செங்கோடு இலுப்புலி, மூலப்பாளையம் பகுதியைச் சேர்ந்த செல்வி லக்சனா (6) என்பவருக்கு கால், கை வலிப்பு அறுவை சிகிச்சைக்காக ரூ. 50 ஆயிரம், சேலம் மாவட்டம் காரை பஞ்சந்தாங்கி ஏரி பகுதியைச் சேர்ந்த லட்சுமி (70) என்பவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் அவருக்கு மருத்துவ நிதியாக ரூ.2 லட்சத்து 70 ஆயிரம்,

ராசிபுரம் தாலுக்கா மங்களபுரம் ஏரிக்காடு பகுதியைச் சேர்ந்த செல்வன் வருண் (10) என்ற சிறுவனுக்கு சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்காக ரூ.3 லட்சம், சேந்தமங்கலம் பவித்திரம் வெள்ளாளர் தெரு தெற்குத் தெருவை சேர்ந்த எஸ். பார்த்திபன் (52) என்பவரின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ. 3 லட்சம், சேலம் மாவட்டம் சுவர்ணபுரி ராஜாஜி தெருவை சேர்ந்த ஆர் பாலசுப்பிரமணியன் (59) என்பவருக்கு இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை செய்ய ரூ 50 ஆயிரம்,

நாமக்கல் தேவராயபுரம் செல்லிபாளையம் கிழக்கு தெருவைச் சேர்ந்த வி. நாகமூர்த்தி (56) என்பவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.3 லட்சம், நாமக்கல் பார்சல் சாவடி தெருவைச் சேர்ந்த செல்வி பி.நர்மதா (16) என்பவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக ரூ.3 லட்சம், நாமக்கல் மரிக்கண்ணி தெருவைச் சேர்ந்த கலைவாணி கோவிந்தசாமி (38) என்பவருக்கு கார்சினோமா கீமோதெரபி சிகிச்சைக்காக ரூ.1 லட்சம் என ரூ.20 லட்சத்து 20 ஆயிரம் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலி ருந்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பரிந்துரையை ஏற்று வழங்கப்பட்டுள்ளது.



திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு "கலைஞர் கோட்டம்" அமைப்பு பணிகள் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கும் மைதானம் ஆகியவற்றை அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எ.வ.வேலு, டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் ஆய்வுசெய்து பார்வையிட்டனர். அப்போது மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.